குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.65/2019

அ.சா. 5

2024–ம் ஆண்டு டிசம்பர் 03–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 05–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தசாமி | ஜாதி | |
| தந்தை பெயர் | கந்தசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.43 மணி,

Accused A1. Patti Ramasamy A2.Kaliyamoorthi, present. Advocate Mr. Kanagaraj present for A1. Advocate Mr. A.Nagenthiran present for A2. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் கருக்கல்வாடியில் குடியிருந்து கொண்டு தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.08.2018 ம் தேதி காலை 06.00 மணியளவில் நான் பள்ளி செல்வதற்காக ஓமலூரில் இருந்து செம்மாண்டபட்டி வழியாக வந்து பாலம் கட்டிக் கொண்டிருக்கும் இடத்திற்கு அருகே வந்த போது அந்த இடத்தில் போலீசார் விசாரணை செய்து கொண்டு இருந்தார்கள். அங்கு அ.சா.1 ரித்திகா என்பவர் இருந்தார். அவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் நான் அருகில் சென்று பார்த்தேன். மாதிரி வரைபடம் வரைந்து எழுதி விசாரணை செய்தார்கள். எழுதிய தாளில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(அந்த 1வது கையெழுத்து அ.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னுடன் நல்லப்பன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டார். போலீசார் இது குறித்து என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. அ.சா.1 எனக்கு சுமார் சம்பவத்திற்கு முன்பு 3 வருடங்களாக எனக்கு பழக்கம். நானும் அ.சா.1 பணிப்புரியும் பள்ளியில் தான் பணிபுரிகிறேன். நான் வழக்கமாக சம்பவம் நடந்த அதே சாலையில் தான் வீட்டிற்கு செல்வேன் என்றால் சரி. சம்பவம் நடந்த சாலை தவிர்த்த வேறு வழிகளிலும் பள்ளிக்கு செல்ல முடியும் என்றால் 3 வழிகள் உள்ளன. நான் 2 வழிகளை பயன்படுத்துவேன். என்னை போலீசார் 15.08.2018 ம் தேதி விசாரித்தனர். நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு சரிவர தெரியவில்லை.

4. நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்காமல் கையெழுத்திட்டேன் என்றால் சரியல்ல. படித்து பார்த்தேன். அ.சா.1 னிடம் நகை திருடு போனது தொடர்பாக எழுதியிருந்தது. போலீசார் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து தான் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் கையெழுத்து செய்தேன் என்றாலும் வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.

5. நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்து இருந்தால், அந்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று என்னால் சொல்லியிருக்க முடியும் என்றால் சரியல்ல. நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று குறிப்பிட்டு சொல்ல முடியாததால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

6. (1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது மேலும் 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்கிறது.) சம்பவம் நடந்து 12 மணி நேரம் கழித்து தான் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்றே சுமார் 06.00 மணியளவில் அந்த வழியாக சென்று கொண்டு இருந்த போது

போலீசார் விசாரித்து கொண்டு இருந்தார்கள். சம்பவ இடத்திற்கு அருகில் சிசிடிவி கேமரா இருப்பதாக எனது முன்னிலையில் ஆய்வு செய்தார்களா என்றால் இல்லை.

7. சம்பவம் இடம் வழியாக பொதுவாக பொதுமக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரி. நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும் அ.சா.1 பணிபுரியும் பள்ளியில் நான் வேலை செய்வதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.58 மணி,

ஒம்/-ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.